திரு. இரா. தாமரைக்கனி : * * *

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : * * *

திரு. ப. பொன்னுரங்கம் : சார், கால் அட்டன்ஷனில் ஸ்பெசிபிக்காக ஒரு இடத்தைப் பற்றி கேட்டு, அதற்கு பதில் சொன்ன பிறகு, மாநிலம் முழுவதிலும் நடைபெற்ற விபத்துக்களையும் அவைகளுக்கு அளிக்கப்பட்ட நஷ்ட ஈடுபற்றியும் கேட்கிறார் உறுப்பினர். அமைச்சரும் அதற்கு புள்ளிவிவரங்கள் அளிக்கிறார். இது நடைமுறைக்கு உகந்தது அல்ல. இதை நீங்கள் அனுமதித்தால் இது ஒரு முன் உதாரணமாக அமைந்துவிடும். எங்களுக்கும் இதைப்போன்று வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று நாங்கள் கேட்கும் போதும் நீங்கள் அனுமதிக்க வேண்டியிருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாநிலம் முழுவதும் பற்றி கேட்டிருப்பதால் நான் அதை அனுமதிக்கவில்லை. அவைக் குறிப்பிலிருந்து அதை நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

(ஆ) மாயூரம் வட்டம் தேரெழுந்தூர் அரசினர் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, "மாயூரம் தாலுக்கா, தேரெழுந்தூரிலுள்ள அரசினர் உயர்நிலைப்பள்ளிக் கட்டடம் பாழடைந்து விழும் நிலையில் உள்ளதால் மாணவர் பெற்றோரிடையே நிலவும் கவலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

மாயூரம் வட்டம் தேரெழுந்தூர் அரசினர் உயர்நிலைப்பள்ளியில் மூன்று கூரைக் கட்டிடங்கள் உள்ளன. அவற்றில் இரண்டின் கூரைகள் பழுதுபட்டன. ஒரு கூரைக் கட்டிடம் பழுது பார்க்கப் பட்டு புதிய கூரை வேயப்பட்டுள்ளது. மற்றொரு கூரைக் கட்டிடத்தில் ஒரு கூடத்தில் உத்தரம் ஒன்று பழுதுபட்டுள்ளது. உத்திரம் பழுதாகியுள்ள அறைகளில் வகுப்புகள் நடத்தப்படவில்லை. இக்கட்டிடத்தையும் பழுதுபார்க்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வரும் நிதி ஆண்டில் இப்பள்ளியின் அடிப்படை கட்டிட வசதிகள் குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1981 பிப்ரவரி 27]

*திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவரவர்களே, வரலாற்று சிறப்பு மிக்க தேரெழுந்தூர் அரசினர் உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் மூன்றாண்டு காலமாக பழுதுபட்ட நிலையில் இது வரையில் பழுதுபார்க்கப்படாமல் இருந்து வருகின்றது. வகுப்புகள் மரத்தடியில் நடக்கின்றன. இது வேதனைக்குரிய ஒன்றாகும். அந்தப் பள்ளியில் மொத்தம் 463 பிள்ளைகள் படிக்கிறார்கள். அவர்களில் நிரந்தரக் கட்டிடத்தில் 70 மாணவர்கள்தான் படிக்க முடியும். மீதமுள்ள 393 மாணவர்களுக்கு இடவசதி இல்லாத நிலை உள்ளது. அவர்கள் அத்தனைபேரும் மரத்தடியிலே படித்து வருகிறார்கள். மேலும் 1979 ஆம் ஆண்டு பெய்த பெருமழையின் காரணமாக சேதம் அடைந்த கட்டிடங்கள் அப்பள்ளியின் கட்டிடங்கள். மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலே இது குறித்து பலமுறை பேசித் தீர்மானமாகக் கூட கொடுக்கப்பட்டிருக்கின்றது. 1980 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 27 ஆம் நாளன்று நடைபெற்ற மாவட்ட வளர்ச்சி மன்றத்தில் இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்தில் சொல்லி விரைவாக அதைப் பழுது பார்க்க வேண்டும் என்றும் அதைப் பார்வையிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டது. அக்கட்டிடத்தை போட்டோ எடுத்தும் கொடுக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் வந்து பார்வையிட்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்திலேயிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதாவது அந்தக் கட்டிடம் 1979 ஆம் ஆண்டு பெய்த பெருமழையினால் பாதிக்கப்பட்ட கட்டிடம் என்றும் ஆகவே அதை வெள்ள நிவாரண நிதியிலிருந்து பழுது பார்க்க வேண்டும் என்றும் அரசுக்கு எழுதியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதிலிருந்து அக்கட்டிடம் 1979 ஆம் ஆண்டு பழுது பட்ட கட்டிடம் என்பது தெரிகின்றது. ஆகவே கடந்த மூன்றாண்டு காலமாக மரத்தடியில் நடைபெற்று வருகின்ற அப்பள்ளிக் கட்டிடத்தை உடனடியாகப் பழுது பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, நிரந்தரக் கட்டிடம் கட்டிக் கொடுக்குமாறும் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட வேண்டும் என்று பல்வேறு விதமான போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என்பதையும் மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவரவர்களே இப்படி மூன்றாண்டுகளாக மட்டுமல்ல. பல ஆண்டுகளாகவே தமிழகத்தில் பல இடங்களில் மாணவர்களுக்குப் போதிய கட்டிடங்கள் இல்லை என்பது அரசுக்கு நன்றாகத் தெரியும். அவைகளையெல்லாம் இந்த அரசு வந்ததற்குப் பிறகு கட்டுவதற்கு ஏற்பாடு செய்துக் கொண்டிருக்கின்றது. இவை புயலால், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கட்டிடங்களாக இருந்தாலும் அதற்குரிய நிதியிலிருந்து அவை கட்டப்படாவிட்டாலும் வருகிற ஆண்டிலே அதற்குரிய நிதியினை ஒதுக்கி கட்டுவதற்கு இந்த அரசு உத்தேசித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 11—20]

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, இன்னும் ஒரே ஒரு முக்கியமான கேள்வி. தயவு செய்து அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்ல வேண்டியது அனைத்தையும் சொல்லியாகிவிட்டது. 4 கேள்விகளைக் கேட்க அனுமதிக்கப்பட்டிருக்கிறீர்கள். இனிமேல் அனுமதிக்க முடியாது.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) சிறைக் கைதிகளின் அடையாளங்களைப் பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு 1981.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு சிறைக்கைதிகளின் அடையாளங்களைப் பதிவு செய்தல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவினை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) பகுதிநேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்ட முன்வடிவு 1981 —(தொடர்ச்சி.)

*திரு. ஆர். தியாகராசன் : மரியாதைக்குரிய சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பகுதிநேரக் கிராம அலுவலர் பதவிகள் நீக்கச் சட்ட முன்வடிவிலே பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு உங்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கிராம அதிகாரிகள் பல்லாண்டுக்காலமாக அதிக அதிகாரம் உள்ள பதவிகளாக அதை ஏற்று வந்திருக்கிறார்கள். அதற்குப் பிறகு படிப்படியாக இன்று அடிமைப்பட்டிருக்கிற சம்பளம் வாங்கக் கூடிய கிராம ஊழியர்களாக ஆக்கப்பட்டு, வேலைகள் கொடுக்கப்பட்டு அதற்கு ஊதியமும் வழங்கப்பட்டு

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS